# சங்க இலக்கியங்களில் கண்டுபிடிப்புகளும் புதுமைகளும்

***பெ. கன்னிதேவி***
உதவிப்பேராசிரியர், கீதாஜீவன் கலை மற்றும் அறிவியல் கல்லூரி
குறுக்குச்சாலை, தூத்துக்குடி
https://doi.org/10.5281/zenodo.15526536

**ஆய்வுச் சுருக்கம்**

*அகம் புறம் என்று பகுக்கப்பட்ட சங்க இலக்கியக் கடலில் ஆழ்ந்த கண்டுபிடிப்பு முத்துக்களையும், புதுமை சிந்தனைகளையும் அள்ளி எடுக்க இயலும். பல்துறைகளிலும் முற்போக்குச் சிந்தனையுடன் வீறுநடை போட்ட சங்க கால மக்களின் இலக்கியங்களில் வானியல், கணக்கியல், பொருளியல், பேரியல் போன்ற கண்டுபிடிப்புகளும் புதுமைகளும் சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளது. உள்ளத்தால் உணர்ந்து தான் அனுபவித்த இன்பத்தினை பிறருக்கு எடுத்துரைக்க இயலாது தான் மட்டுமே அறிய தக்க அகமும், அதற்கு எதிர்மாறான புறத்தார்க்கு எடுத்துரைக்கும் பாங்கில் அமையும் புறமும் சங்க கால மக்களின் வாழ்வியலைக் காட்டும் காலக் கண்ணாடிகளாகும். அக்கால கண்ணாடியில் கண்டுபிடிப்புகளும், புதுமைகள் பற்றிய செய்திகள் ஆங்காங்கே நட்சத்திரங்களாக மின்னுகின்றன. அவற்றை சுட்டிக் காட்டுவதே இவ்வாய்வின் நோக்கமாகும்.*

**முன்னுரை**

*சங்க இலக்கியம் சிந்தனையின் கருவூலம் அறிவின்சுரங்கம் என்றால் அது மிகையாகாது. சங்க இலக்கியத்தை ஆய்கின்ற போதே அவற்றின் கண்டுபிடிப்புகளும் புதுமைகளும் நமக்கு புலனாகும். கல் தோன்றி மண் தோன்றா காலத்தே முன் தோன்றிய மூத்தக்குடி என்று மார்தட்டிக் கொள்ளும் தமிழர்கள் தம் வாழ்வு மேம்படவும், வளம் பெறவும், வசதிகளை எய்தவும் அவ்வாறு பரிணமித்து ஒவ்வொன்றும் ஒவ்வோர் பக்குவ நிலையினை அடைந்து புவியியல், இயற்பியல், வேதியியல், விண்ணியல், உயிரியல், மண்ணியலாக சங்க இலக்கிய நூல்களுல் ஒளிந்துள்ளன என்ற கூற்றினை நீங்கள் உணர்ந்து கொண்டால் உலகின் தலைசிறந்த கண்டுபிடிப்புகளும், புதுமைகளையும் கூறியவர்கள் நம் பாட்டன் என்பது அனைவரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒன்றே என்பது இவ்வாய்வில் புலனாகும்.*

**தொல்காப்பியர்**

*சங்க கால தமிழர்களின் கண்டுபிடிப்புகளையும், புதுமைகளையும் நிரல்படுத்திய புலவர்கள் பலர் இருந்தனர்.*

**தொல்காப்பியர்**

***"ஒன்றறி வதுவே உற்றறி வதுவே***
***இரண்டறி வதுவே அதனொடு நாவே***
***மூன்றறி வதுவே அவற்றொடு மூக்கே***
***நான்கறி வதுவே அவற்றொடு கண்ணே***
***ஐந்தறி வதுவே அவற்றொடு செவியே***
***ஆறறி வதுவே அவற்றொடு மனமே***
***நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத் தினமே"***

***(தொல்காப்பியம் -30)***

*என்ற நூற்பாவில் உணரும் தன்மையுடையது உயிர். உயிர்களது உடம்பின் கண் அமைந்த உறுப்புகளின் குறைவு மிகுதிகளுக் கேற்ப அவற்றின் உணர்ச்சி வாயில்கள் வேறுபடும் என்பதை, உயிர் எத்தன்மைத்து என்று வினாயவழி உணர்தல் தன்மைத்து என்றார். இம்மரபினைத் தொல்காப்பியர் தொல்லுயிர்*

*என்று வழங்குவர். இவ்வுலகத்து உயிர்களை ஓரறிவுடையன முதல் ஆரறிவுடையன வரையில் அறுவகையாகப் பகுக்கப் பெற்றிருந்த படிமுறை வளர்ச்சிக் கொள்கையையும் விளக்குகிறார்.*

## விண்ணியல்

*"உலகம் என்னும் தமிழ்ச் சொல்லுக்கு "உலவு" என்பது "சுற்றுதல்" என்பது பொருள். உலகம் தன்னையும் ஞாயிற்றையும் சுற்றி வரும் என்ற விண்ணியலை,*

***"நீனிற விசும்பின் வலனேர்பு திரிதரும்***
***நாண்மீன் விராய கோண்மீன் போல"***

***(பட்டின பாலை -67)***

*என்ற பாடலில் ஞாயிறு நடுவேயிருக்க கோள்கள் சூழ்ந்திருந்தன என்பதையும்,*

***"மண் திணிந்த நிலனும்***
***நிலம் ஏந்திய விசும்பும்***
***விசும்பு தைவரு வளியும்***
***வளித் தலை இய தீயும்***
***தீ முரணிய நீரும், என்றாங்கு***
***ஐம்பெரும் பூதத்து....."***

***(புறநானூறு-2)***

*என்ற பாடலில் ஐம்பெரும் பூதங்களான நிலனையும், வானையும், காற்றையும், நெருப்பையும் நீரையும் உலகம் கொண்டுள்ளது என்று முரஞ்சியூர் முடிநாகராயர் கூறியுள்ளார்.*

*மதுரைக் காஞ்சியில் சூரிய குடும்பத்தின் விவரங்களை*

***"சென்ற காலமும் வரூஉம் அமயமும்***
***இன்றிவண் தோன்றிய ஒழுக்க மொடு***
***நன்குணர்ந்து***
***வானமு நிலனுந் தாமுழு துணருஞ்...."***

***(மதுரைக்காஞ்சி -475)***

*என்ற பாடலில் ஒரு கிரகத்தில் இருந்து தான் மனிதர்கள் வந்தார்கள் என்ற விண்ணியல் கூற்று நமக்கு வியப்பை ஏற்படுத்துகிறது.*

## கணக்கியல்

*உலகம் தோன்றி மறையும் காலத்தை ஊழி என்பர். எனவே ஊழி என்பது பன்னெடுங்காலமாகும். இவற்றை*

***"நெய்தலும் குவளையும் ஆம்பலும் சங்கமும்***
***மையில் கமலமும் வெள்ளமும் நுதலிய***
***செய்குறி யீட்டங் கழிப்பிய வழிமுறை"***

***(பரிபாடல் -2)***

*என்ற பாடலில் கணக்கற்ற பல ஊழிகள் பல கோடி ஆயிரம் காலத்தையும், ஆம்பல் ஆயிரம் கோடி எனவும், வெள்ளம் கோடியையும் கமலம் நூறாயிரம் கோடியையும், பத்மம் என்பது சங்கம் பத்து நூறாயிரம் கோடியையும், நெய்தல் அல்லது குவலை நூறு கோடி எனவும் கீரந்தையார் கூறுவர்.*

## பொறியியல்

*சங்க காலத்தில் தமிழர்கள் மண், செங்கல், மரம் போன்றவற்றைக் கொண்டு குடியிருப்புகளைக் கட்டினார்கள், இதனை*

***"விரி கதிர் பரப்பிய வியல்வாய் மண்டிலம்***
***இருகோல் குறிநிலை விழுக்காது குடக்கேர்பு***
***ஒருதிறம் சாரா அரை நாள் அமையத்து***
***நூலறி புலவர் நுண்ணிதின் கயிறிட்டு***
***தேஎங் கொண்டு தெய்வ நோக்கிப்***
***பெரும் பெயர் மன்னர்க் கொப்ப மனை வகுத்து....***

***(நெடுநல்வாடை -72)***

*என்ற பாடலில் வானியல் அறிந்தால் தான் கட்டுமானப்பணியைத் தொடங்குவதற்குரிய சிறந்த காலத்தைத் தேர்ந்தெடுத்து மனைகளையும் வாயில்களையும், மண்டபங்களையும் வகைப்படுத்தி பெரும்புகழ் வாய்த்த தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனிற்கான அரண்மனையினை அமைக்க இயலும் என்பதை கூறுகின்றார்.*

*தாமரைப் பூவைப் போன்றது சீர் மிகுந்த ஊர் அதில் பூவின் இதழ்ப் போல் தெரு பூவின் மொட்டைப் போன்ற அரண்மனை என்ற குடிமுறைப் பொறியியல் கண்டுபிடிப்பினை,*

***"மாயோன் கொப்பூழ் மலர்ந்த தாமரைப்***
***பூவொடு புரையும் சீரூர், பூவின்***
***இதழகத் தனைய தெருவம்., இதழகத்து...."***

***(பரிபாடல் -5)***

*என்ற பாடலில் மதுரை கண்காயனார் மகனார் நக்கீரனார் கூறுகின்றார்.*

*மேலும் பதிற்றுப் பத்தில்*

***"தீம்பிழி எந்திரம், பத்தல் வருந்த"***

***(பதிற்றுப்பத்து -20)***

*என்ற பாடலில் கரும்பைப் பிழிவதற்கும் எந்திரங்களை உருவாக்கிய கண்டுபிடிப்பு புலனாகும்.*

**முடிவுரை**

*சங்க காலத் தமிழர்கள் பரந்துபட்ட சிந்தனையுடையவர்கள். அவர்களின் கண்டுபிடிப்புகளையும், புதுமைகளையும் முழுமையாகச் சொல்வதானால் ஒரு பெரிய நூலாகவே எழுத வேண்டி வரும், அன்றைய கலத்திலேயே அவர்கள் உலகியல் பார்வையுடன் வாழ்ந்தனர். எனவே சங்க நூல்களின் புதைந்திருக்கும் இந்த அதிசயத்தை வெளிக் கொணரக் கூடிய முயற்சிகளில் சங்க கால புலவர்கள் மட்டுமல்லாமல் பலரும் ஈடுபடுவதன் மூலம் அது நமது கண்டு பிடிப்பிற்கு நன்மை பயக்கும் என்பதை புரிந்து கொள்ளலாம். சங்க கால நூல்களில் புதுமைகளின் தாக்கம் கண்டுபிடிப்பு புதைந்துள்ளது என்பது உண்மைதானே. ஆகும்.*

**துணைநூற்பட்டியல்**

1. *பரிபாடல் மூலமும் உரையும், புலியூர் கேசிகன்*
2. *பதிற்றுப்பத்து மூலமும் உரையம், செண்பகா பதிப்பகம்*
3. *புறநானூறு மூலமும் உரையும், புலியூர் கேசிகன்*
4. *நெடுநல்வாடை, இளங்குமரன்*
5. *தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை*